PUBLIC LIBRARY
JAFFNA

அரசியல் அமைப்பு அலுவல்கள் மற்றும்
தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு,
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டம்,
நீதியை சமமாக அணுகுதல்
கருத்திட்டம்

# சட்டமும் நாமும்

எம்.பி. முஹைறதீன் LL.B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அமைப்பு அலுவல்கள் மற்றும்
தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு,
ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டம்,
நீதியை சமமாக அணுகுதல்
கருத்திட்டம்

# சட்டமும் நாமும்

எம்.பி. முஹைதீன் LL.B.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்ட அதிகாரியின் ஆசிச் செய்தி

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டம் (UNDP) நடைமுறைப்படுத்தி வரும் நீதியை சமமாக அணுகுதல் கருத்திட்டத்தின் செயற்பாடுகள் தற்போது கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் வாழ்கின்ற சாதாரண மக்கள் தங்களுடைய நாளாந்த வாழ்வில் எதிர் கொள்ளும் சட்டப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு அவர்களை தயார்படுத்தி அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல் என்பது தொடர்பில் எமது அமைப்பு முக்கிய கவனம் செலுத்தி வருகின்றது.

இதன் அடிப்படையில் எமது அமைப்பு இப் பிரதேசத்தில் நடமாடும் சட்ட சேவையினை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடாத்தி இப் பகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களால் இழக்கப்பட்ட சட்ட ரீதியான ஆவணங்களை அதாவது உறுதி, காணி அனுமதிப் பத்திரம், அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், பிறப்பு, இறப்புப்பத்திரம், திருமணப்பதிவுப் பத்திரம் என்பவைகளை எவ்வாறு மீளப் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பில் சட்ட ஆலோசனைகள் வழங்கியது.

மேலும் இப் பகுதியில் உள்ள மக்கள் அவர்களுடைய நாளாந்த வாழ்கையில் ஏற்படுகின்ற முக்கியமான சட்டப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்காக, அவர்களுக்கு சட்ட அறிவினை வழங்குவதற்கு "சட்டமும் நாமும்" என்னும் நூலை வெளியிட்டு இப்பகுதி மக்களுக்கு வழங்க எமது பிரதேச குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்திற்கு அமைவாக சட்டமும் நாமும் எனும் இச்சிறிய கைநூல் எமது பணிவான வேண்டுதலின் படி கல்முனை நீதவான் எம். பி. முஹைதீன் அவர்களால் எழுதப்பட்டது.

இச்சிறிய கைநூல் இப் பகுதியில் உள்ள மக்களின் சட்டப் பிரச்சினைகளுக்கு பதில் கொடுக்கும் என எதிர் பார்க்கின்றேன். நல்வாழ்த்துக்கள்

**என். ஜீனத் சுனாரா**
திட்ட அதிகாரி
**UNDP** கொழும்பு

2005.10.10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எல்லோரும் எங்களது நாளாந்த வாழ்வில் சட்டத்துடன் இணைந்துள்ளோம் என்பதை அறிய வேண்டும். தாயினுடைய கருவறையில் ஒரு குழந்தை உயிர் பெற்ற நேரத்திலிருந்து மண்ணில் மனிதனாக வாழ்ந்து இறக்கும் வரையிலும், ஏன் இறப்பு ஏற்பட்ட பின்னரும் கூட சட்டத்தின் அவசியமும் அதன் பாதுகாப்பும் ஒரு மனிதனுக்கு அவசியமாகின்றது.

சட்டம் என்பது ஒரு தனிமனிதனையும், சமுகத்தையும், சமுதாயத்தையும், நாட்டினையும், ஏன் முழு உலகத்தினையும், நல்வழிப்படுத்துவதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் காலத்திற்கு காலம் ஏற்படுத்தப்பட்ட ஓர் எல்லை வரம்பாகும்.

இப்படியான சட்டதிட்டங்களை பின்பற்றி வாழ்வதால் ஒரு தனிமனிதனும் சமுகமும், சமுதாயமும், நாடும், ஏன் முழு உலகமும் முழுப்பாதுகாப்பினை பெறுவதோடு அமைதியாகவும், நிம்மதியாகவும், நிலைத்திருக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

சட்டத்தினை மனித சமுதாயம் மீறி நடக்க முற்படுகின்ற சந்தர்ப்பங்களில்தான் அமைதியின்மையும், பயமும், குழப்பமும், மனித உயிர்கள் பறிபோகக் கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

சட்டத்தினை முழு மனித சமுதாயமும் பின்பற்றி நடக்கின்ற சந்தர்ப்பத்தில், ஆரோக்கியமான, அமைதியான, நிம்மதியான வாழ்க்கையினை மனித குலம் அடைவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

ஒரு சட்டத்தினை ஒரு தனி மனிதனோ அல்லது ஒரு தாபனமோ மீறி நடக்கின்ற சந்தர்ப்பங்களில் அந்த தனி மனிதனும் அத்தகைய தாபனமும் நீதி மன்றின் மூலம் தண்டனைக்குள்ளாகின்றன.

அனேகமான சந்தர்ப்பங்களில் சாதாரண பொதுமக்கள் நீதிமன்றில் ஒரு சட்டத்தை மீறி நடந்தமைக்காக முன்நிறுத்தப்படும் போது அவர்கள் கூறுவது, இப்படியானதொரு சட்டம் இருப்பதென்பது தங்களுக்கு தெரியாது என்பதாகும். இப்படியான வாதங்களை நீதிமன்றம் ஏற்றுக் கொள்வதில்லை காரணம், சட்டமானது; எல்லோருக்கும் சட்டம் தெரிந்திருக்க வேண்டும் என்பதை அவசியப்படுத்துகின்றது.

உண்மையிலேயே சில குற்றச் செயல்கள் பொது மக்களுக்கு சட்டம் பற்றிய தெளிவின்மை. அறிவின்மை காரணமாகவே நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சிறிய கைநூலின் உண்மையான நோக்கம் மக்கள் தங்கள் நாளாந்த வாழ்வில் சட்டத்துடன் தொடர்பு பட்டிருப்பதனால் பொது மக்களுடன் மிகவும் நெருக்கமான தொடர்புடைய சில ஏற்பாடுகளையும் அந்த சட்டங்களின் துணை கொண்டு எவ்வாறு தங்களுடைய அத்தியவசியத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வது என்பது தொடர்பில் ஒரு தெளிவான விளக்கத்தினைப் பெறுவதே ஆகும்.

## அடிப்படை மனித உரிமைகள்

முதன் முதலில் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய சில விடயங்கள் முன்வைக்கப் படுகின்றன.

ஒவ்வொரு தனிமனித வாழ்விலும் அடிப்படை மனித உரிமைகள் மிகவும் அத்தியவசியமானதாகக் காணப்படுகின்றன. அந்த அடிப்படை உரிமைகள் எமது அரசியலமைப்புச் சட்டத்தின் 3ம் அத்தியாயத்தில் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

சட்டத்தின் முன் சகலரும் சமம். பாகுபாடு காட்டக்கூடாது, ஒரு குற்றச் செயல் ஒருவருக்கெதிராக நிருபிக்கப்படும் வரை அவர் குற்றம் அற்றவர், பிரஜை ஒருவரை துன்புறுத்துதல் கூடாது, தடை செய்தல் கூடாது, சித்திரவதை செய்ய அனுமதிக்க கூடாது என்பன முக்கியமான அம்சங்களாகும்.

மேலும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உயிர் வாழ்வதற்கான உரிமை, பேச்சுச் சுதந்திரம், மதச் சுதந்திரம், சுதந்திரமாக பயணம் செய்வதற்கான சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், வாக்களிக்கும் உரிமை மதச்சுதந்திரம், தொழில் செய்வதற்கான சுதந்திரம், கல்வி கற்பதற்கான உரிமை என்பவைகள் முக்கியமான மனித உரிமை அம்சங்களாக காணப்படுகின்றன.

மனித உரிமை என்பதை மிகவும் சுருக்கமாக பின்வருமாறு கூறலாம் "மற்றவர்களின் உரிமையை மதித்து தமது உரிமைகளை அனுபவித்தல்" என்பதாகும்.

அரச தாபனம் அல்லது திணைக்களம் என்பவைகளால் ஒரு தனிமனிதனின் உரிமை மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவ்வாறு உரிமை பாதிப்புக்குள்ளானவர் தனது உரிமையை மீண்டும் நிலை நாட்டுவதற்காக அவ்வாறான சம்பவம் நடந்து 30 நாட்களுக்குள் உயர் நீதி மன்றிற்கு மனுச் செய்யலாம். அல்லது மனித உரிமை ஆணைக்குழுவிற்கு மனுச் செய்து உரிய பரிகாரத்தை பெற்றுக் கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் அரச தாபன பொது உத்தியோகத்தர் ஒருவரினால் ஒருவரின் அடிப்படை உரிமைக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள விடத்து எழுத்து மூல விண்ணப்பத்தின் மூலம் பாராளுமன்ற நிருவாக ஆணையாளருக்கு (ஓம்புட்ஸ்மேன்) அறிவித்து அவர் மூலமும் உரிமையை மீண்டும் நிலைநாட்ட முடியும். இந்த ஏற்பாடும் அரசியலமைப்புச் சட்ட மூலம் ஏற்படுத்தப்பட்ட விடயமாகும்.

மேலே கூறியவற்றிலிருந்து அடிப்படை உரிமை மறுக்கப்பட்ட ஒரு பிரஜை 1. உயர் நீதி மன்றிக்கு 2. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு 3. பாராளுமன்ற ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பித்து மீண்டும் உரிமையை நிலைநாட்ட முடியும்.

## இலஞ்சமும், ஊழலும்

இன்று நமது சமுதாயத்தில் மிகவும் பாரதூரமான முறையில் பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விடயம் ஊழல் செய்வதும், இலஞ்சம் பெறுவதும், இலஞ்சம் கொடுப்பதுமாகும். ஒரு தனிமனிதன் தன்னுடைய சட்டப்படியான தேவையொன்றினை ஏதாவது ஓர் அரச தாபனமூலம் நிறைவேற்ற அது தொடர்பான ஓர் அரச உத்தியோகத்தரை நாடும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட அந்த வேலையானது இலஞ்சம் கொடுப்பது மூலம் நிறைவேற்றப்படுகின்ற துர்ப்பாக்கியமான நிலை இன்றைய நாட்களில் காணப்படுகின்றன.

இலஞ்ச ஊழல்கள் சட்டத்தின் மூலம் இலஞ்சம் வாங்குவதும் குற்றம், இலஞ்சம் கொடுப்பதும் குற்றம். இலஞ்சம் வாங்குபவர் எவ்வாறு நீதி மன்றினால் தண்டிக்கப்படுவாரோ அதே போன்றே இலஞ்சம் கொடுப்பவரும் தண்டிக்கப்படுவார் என்பதை எல்லோரும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

## சிறுவர் பாதுகாப்பு

ஒவ்வொரு நாட்டினதும் முக்கிய செல்வங்களாக கணிக்கப்படுபவைகளில் சிறுவர்களும் அடங்குவார்கள். இன்றைய சிறார்கள்தான் நாளைய உலகின் தலைவர்கள் என்று கூறப்படுகின்றது. இப்படியான சிறார்களைப் பேணிப்பாதுகாத்து அவர்களை உரிய முறையில் வழி நடாத்தி நாட்டின் பிரஜைகளாக மாற்றுவது நம் எல்லோரினதும் முக்கிய கடமையாகும்.

முதலில் சிறுவர்கள் என்றால் யார் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பட்டயத்தின் ஏற்பாடுகளின் படி 18 வயதிற்கு குறைந்த எல்லோரும் சிறுவர்களாக கருதப்படுவார்கள். இது நமது இலங்கைச் சட்டத்திலிருந்து சற்று வேறுபடுகின்றது. அதாவது 1956ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பெண்கள், இளம்பராயத்தினர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்தும் சட்டத்தின் படி 14 வயதிற்கு குறைந்தவர்கள் எல்லோரும் சிறுவர்களாக கருதப்படுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக 14 வயதிற்கு குறைந்த சிறுவர்களை எப்படியான இடங்களிலும் வேலைக்கு அமர்த்துவது குறித்த சட்டத்தின் படி பாரதூரமான குற்றமாகும். இவ்வாறு 14 வயதிற்கு குறைந்த சிறுவர்களை யாராவது, எங்கேயாவது வேலைக்கு அமர்த்தி இருப்பதை அறிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அல்லது தொழில் திணைக்களம் அல்லது சர்வோதய சட்ட சேவை மாவட்ட அலுவலகத்திற்கு தகவல் கொடுத்து அத்தகைய சிறுவர்களின் வாழ்வினை வளப்படுத்த உதவ முடியும்.

18 வயதிற்கு குறைந்தவர்களை இரவு நேரத்தில் வேலைக்கு அமர்த்த முடியாது. ஆனால் 16-18 வயது உடையவர்களை அவசரமான சந்தர்ப்பங்களில் இரவு நேரத்தில் வேலைக்கு அமர்த்தலாம். ஆனால் இப்படியானவர்களை இரவு நேரத்தில் வேலைக்கு அமர்த்துவதற்கு 7 நாட்களுக்கு முன் தொழில் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்காமல் இரவு நேரத்தில் வேலைக்கு அமர்த்தினால் குற்றமாகும்.

சிறுவர்களின் பெற்றோர்கள் மீது பாரிய கடமைகள் சுமத்தப்பட்டுள்ளன. வயது வந்த எல்லாச் சிறுவர்களையும் பாடசாலைக்கு அனுப்பி கல்வி புகட்டுதல், சிறுவர்களை வேலைக்கு அமர்த்த அனுமதி மறுத்தல், அபாயகரமான நடனப்பயிற்சிகளில் ஈடுபடுத்துதலை தடுத்தல், 18 வயதிற்கு குறைந்தவர்களை கடல் தொழிலில் ஈடுபடுத்துதலை தவிர்த்தல், சிறுவர்கள் நோய்வாய்ப்படும் போது உரிய வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தல், சிறுவர்களை சித்திரவதை செய்வதை தடுத்தல், சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதில் இருந்து பாதுகாத்தல் ஆகியவைகள் மீது பெற்றோர்கள் தங்களது கவனங்களைச் செலுத்த வேண்டும்.

18 வயதிற்கு குறைந்தவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள தாபனங்கள் அவர்கள் பற்றிய விபரங்களை பதிவு செய்து வைத்திருக்க வேண்டும். தேவையான நேரங்களில் உரியவர்களுக்கு தகவல் புத்தகத்தை பார்வையிட அனுமதி அளிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் தொழில் தருனர் குற்றவாளியாக கருதப்படுவார்.

சிறுவர்களின் உரிமைகளை மதித்து அதன்படி அவர்களை வழி நடாத்தி, சிறார்களை நாளைய உலகின் தலைவர்களாக மாற்றுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசையா சொத்து (நிலம்) தொடர்பான விடயங்கள்

பொது மக்களிடையே காணிகள் சம்பந்தமான பிரச்சினைகள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. இவ்வாறான பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்வதற்காக அது தொடர்பான சட்டங்களை அறிந்திருப்பது அவசியமாகும். விழிப்பாக இருந்தால் இழப்பு என்பது இல்லை.

ஒரு காணியில் ஆட்சியில் உள்ள ஒருவரை சட்டத்திற்கு முரணாக அக் காணியின் உரிமையாளரோ அல்லது வேறு எவருமோ வெளியேற்றினால் அந்த உடைமை கொண்டவரின் நிலைமை என்ன என்பது பற்றி ஆட்சி உரிமை கட்டளைச்சட்டம் கூறுகின்றது. அதாவது, அவ்வாறு உடைமை அகற்றப்பட்டவர் தான் உடைமை அகற்றப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வருடத்திற்குள் உரிய சிவில் வழக்கு ஒன்றினை வைத்து மீண்டும் அக்காணியில் தனது உடைமையை பெற்றக் கொள்ள முடியும்.

இப்படியானதொரு சந்தர்ப்பத்தில் உடைமையினை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு ஆட்சி அகற்றப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் பொலிஸார் ஊடாகவோ அல்லது ஒரு சட்டத்தரணியூடாகவோ ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைகள் சட்டத்தின் கீழும் வழக்கிட்டு மீண்டும் அக்காணிக்கு செல்ல முடியும்.

ஒரு காணிக்கு உரிமையாளர் உரிய உறுதியுடன் இருக்கும் போது அக் காணிக்கு வேறு ஒருவர் ஆட்சி உரிமை மூலம் சொந்தமாகக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. அதாவது குறிப்பிட்ட காணியில் 10 வருடங்களாக காணியின் உரிமையாளருக்கு எதிராக எதிருடைமை வைத்திருந்ததை சிவில் நீதிமன்றில் நிருபித்தால் ஆட்சி வைத்திருந்தவருக்கு அக் காணி சொந்தமாகும்.

இந்த விடயத்தில் காணி உரிமையாளர்கள் மிகவும் அவதானமாகவும், விழிப்பாகவும் இருந்தால் தங்களது காணிகளை பாதுகாக்க முடியும்.

அரசாங்கத்திற்கு சொந்தமான காணியினை ஆட்சி உரிமை மூலம் சொந்தம் கொள்ள முடியாது. அரச காணியில் எவ்வளவு காலம் ஆட்சி செய்தாலும் அந்த ஆட்சி ஏற்கப்படுவதில்லை. அரசிற்கே அக் காணி சொந்தமாகும்.

கூட்டாக சொந்தமுள்ள காணியொன்றிற்கு கூட்டு உரிமையாளர்கள் எல்லோரும் அக் காணியில் எல்லாப் பகுதிக்கும் சொந்தக்காரர்கள் ஆவார்கள். தனிப்பட்ட பகுதியை தன்னுடையதென்று எந்த கூட்டாளரும் உரிமை கோரமுடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசையா சொத்திற்கு உறுதி எழுதும் போது கவனிக்க வேண்டியவைகள்

ஓர் அசையா சொத்தினை (காணி, நிலம் அதனுடன் இணைந்தவைகள்) அச் சொத்தின் உண்மையான உரிமையாளர் இன்னொருவருக்கு அதனை நன்கொடையளிக்கும் போது அல்லது ஈட்டு உறுதி நிறைவேற்றும் போது அல்லது கிரயமாக விற்பனை செய்யும் போது உரிய உறுதி ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும். அப்போதுதான் அச் சொத்தின் உரிமை இன்னொருவருக்கு சென்றடையும்.

உறுதி எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என்று நொத்தாரிசு கட்டளைச் சட்டமும், மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டமும் ஏற்பாடுகளை கொண்டிருக்கின்றன. இந்த ஏற்பாடுகளில் ஆதனத்தை மாற்றிக் கொடுப்பவர்களின் கடமை, ஆதனத்தை பெறுபவரின் கடமை, ஆதன மாற்றம் இடம் பெறும் போது சாட்சிகளாக கையொப்பமிடுபவர்களின் கடமை முக்கியமாக உறுதியை நிறைவேற்றும் நொத்தாரிசின் கடமைகள் என்ன என்பன பற்றியெல்லாம் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தில் மிகவும் விபரமாக விபரிக்கப்பட்டு இருக்கின்றன.

குறித்த ஆதனத்தை பெறுபவர், உண்மையாக அந்த ஆதனத்தை கொடுப்பவர் அவ்வாதனத்தின் உரிமையாளரா என்பதை தனது நொத்தாரிசு ஊடாக முதற் பதிவுகள் மூலம் அறிய வேண்டும். மாற்றி எடுக்கப்படும் ஆதனத்திற்கு உரிய நபர் உண்மையான உரிமையாளர் அல்லாவிட்டால் அவரிடம் அந்த ஆதனத்தை கொள்வனவு செய்வதை தவிர்த்தல் வேண்டும்.

அவ்வாறு உறுதி மாற்றம் செய்யும் போது குறித்த உறுதியானது பதிவு செய்யப்பட்ட (பதிவாளர் திணைக்களத்தில்) பிரசித்த நொத்தாரிசு மூலம் எழுதி சான்றளிக்கப்பட வேண்டும்.

உறுதி நிறை வேற்றும் சந்தர்ப்பத்தில் கட்டாயமாக பிரசித்த நொத்தாரிசும், ஆதனத்தை விற்பவரும், ஆதனத்தை வாங்குபவரும் குறைந்தது இரண்டு சாட்சிகளும் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் சமுகமாக இருந்து அத்தகைய உறுதி நிறைவேற்றப்பட வேண்டும். இங்கு ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் என்பது மிகவும் முக்கியமானதாகும்.

உறுதி நிறைவேற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பிரசித்த நொத்தாரிசுக்கு ஆதனத்தை விற்பவரை நன்கு தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறு தெரியாவிடினும் உறுதிக்கு சாட்சியாக ஒப்பமிடுபவர்களை நொத்தாரிசு கட்டாயமாக தெரிந்திருக்க வேண்டும். தெரியாத நபர்களுக்கு நொத்தாரிசு உறுதி நிறைவேற்ற முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இடங்களில் உறுதி நிறைவேற்றப்படும் போது நொத்தாரிசு சமுகமாக இருப்பதில்லை. அவர்களுக்கு பதிலாக அவர்களுடைய (கிளாக்) இலிகிதர்கள் சமுகமாக இருந்து உறுதிகளை நிறைவேற்றுவார்கள். இத்தகைய ஆவணங்கள் செல்லுபடியாகாது. இவ்வாறான உறுதிகள் கேள்விக்குரிய ஆவணமாக மாறும் என்பதை கவனத்தில் கொள்க.

பிரசித்த நொத்தாரிசு உறுதி நிறைவேற்றிய பின் அந்த உறுதியிலுள்ள வாசகங்களை வாசித்துக் காட்டி சாட்சிகளின் ஒப்பங்களைப் பெற்ற பின்னர் தனது உறுதி மொழியுடன் தனது தொழில் முத்திரை பதித்து ஒப்பமிடல் வேண்டும். இவைகளை கவனித்து உறுதிகள் நிறைவேற்றினால் வீண் பிணக்குகளை தவிர்க்கமுடியும்.

## மோசடிகள் ஏற்படுவதை எவ்வாறு தவிர்க்கலாம்

சமுதாயத்தில் எல்லா மனிதர்களும் நல்ல மனிதர்கள் அல்ல, எல்லா மனிதர்களும் கெட்ட மனிதர்களும் அல்ல. நம்மிடையே ஏமாற்றி மோசடி செய்பவர்களும் இருக்கின்றார்கள். இவ்வாறு மோசடி செய்வபர்களிடமிருந்து பாதுகாப்பினைப் பெற சட்டம் எற்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. இந்த வகையில் மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டம் முக்கியமாக அமைகின்றது.

மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் படி எல்லா வகையான நிறைவேற்றங்களும் எழுத்தில் இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது. அவ்வாறாக எழுத்தில் நிறைவேற்றப்படுகின்ற ஆவணங்கள் ஒரு பிரசித்தி நொத்தாரிசு மூலம் நிறைவேற்றப் பட வேண்டும் எனவும் எடுத்துக் கூறுகின்றது. அதாவது எல்லா வகையான ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், கிரய உறுதிகள், ஈட்டு உறுதிகள், நன்கொடை உறுதிகள், இறுதி விருப்பாவணங்கள், கொடிசில், வியாபார ஒப்பந்தங்கள், அற்றோனி தத்துவங்கள் என்பன எழுத்தில் இருக்க வேண்டும் என்றும் அவைகள் முறையாக பிரசித்த நொத்தாரிசினால் (சட்டத்தரணி) நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் இந்த சட்டம் எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறாக சட்டம் கூறுவதை கவனியாது வேறு வகைகளில் உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும், உறுதி ஆவணங்களும் நிறைவேற்றப்படும் போது அதாவது ஆவணங்கள் உரிய முறையில் எழுத்துருவம் பெறவில்லையானால் ஒரு திறத்தவர் மோசடிக்குள்ளாவதற்கு சந்தர்ப்பம் உண்டு. சட்டத்தை அனுசரித்து நடந்தால் அதன் பாதுகாப்பினை எல்லோரும் பெற்றுக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள்

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் பிறப்பும், இறப்பும் இயற்கையானது. பிறப்பிலும், இறப்பிலும் ஏற்படக்கூடிய விளைவுகளை வெற்றிகரமாக எதிர் கொள்வதற்காக அத்தகைய பிறப்பையும், இறப்பையும் பதிவு செய்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

## பிறப்பை பதிதல

பிறப்பு, இறப்பு சட்டத்தின் படி பிறப்பை பதிவு செய்தல் வேண்டும். ஒரு குழந்தை பிறந்தவுடன் அப்பிள்ளையின் பெற்றோரால் அல்லது வேறு அனுமதிக்கப்பட்டவரால் உரிய உத்தியோகத்தருக்கு அறிவித்து பிறப்பை பதிவு செய்தல் வேண்டும்.

## பிறப்பை எவ்வாறு பதிவு செய்தல்

குழந்தை ஒன்று பொதுவாக மூன்று இடங்களில் பிறக்கலாம். அவைகளாவன.

1. வைத்திய சாலையில்.
2 வீட்டில்.
3 வேலைசெய்யும் இடத்தில் அல்லது தோட்டத்தில்.

அனேகமான குழந்தைகள் தற்காலத்தில் வைத்தியசாலைகளிலேயே பிறக்கின்றன. அவ்வாறு வைத்தியசாலைகளில் பிள்ளைகள் பிறந்தால் வைத்தியசாலையில் வழங்கப்படும் படிவத்தை பூரணப்படுத்தி அதாவது பிள்ளையின் பெயர், இடம், பிறந்த திகதி, ஆணா, பெண்ணா என்ற விபரம், தந்தையின் விபரம், தாயின் விபரம் என்பவைகளை வெளிப்படுத்தி பகுதி பதிவாளரிடம் சமர்ப்பித்து மூன்று மாதங்களுக்குள் பதிவு வைக்க வேண்டும்.

சில அரிதான சந்தர்ப்பங்களில் வீடுகளிலும் பிள்ளைகள் பிறக்கின்றன. இவ்வாறாக வீட்டில் பிள்ளை பிறந்தால் பகுதி கிராம சேவகருக்கு அறிவித்து அவருடாக பகுதி பிறப்பு பதிவாளரிடம் பிறப்பை பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்தகைய பதிவும் பிள்ளை பிறந்து மூன்று மாதங்களுக்குள் வைக்க வேண்டும்.

தோட்டப் பகுதிகளில் தோட்ட லயன்களில் பிள்ளைகள் பிறந்தால் அத்தோட்டத்தில் கடமையாற்றும் தோட்ட அத்தியட்சகர் ஊடாக பகுதிப் பதிவாளருக்கு அறிவித்து பிறப்பை பதிவு செய்து கொள்ளலாம். இப்படியான பிறப்புப் பதிவும் மூன்று மாதங்களுக்குள் வைக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறப்பை பதிவு செய்யாமல் இருந்தால் அதனை மீண்டும் எவ்வாறு பதிவு செய்ய முடியும்**

1. பிள்ளை பிறந்து மூன்று மாதங்களுக்குள், பிறப்புப் பதிவாளருக்கூடாக பிறப்பைப் பதிவு செய்ய முடியும்.

2. குழந்தை பிறந்து 12 மாதங்கள் வரை பகுதி மேலதிக மாவட்ட பதிவாளருக்கு குழந்தையின் பிறப்பைப் பற்றி பிரகடனப்படுத்தி பிறப்பை பதிவு செய்ய முடியும்.

3. 12 மாதங்களுக்குப்பிறகு பிறப்பைப் பதிவு செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதனை உதவி பதிவாளர் நாயகம் ஊடாக பதிவை வைக்க முடியும்.

குழந்தை பிறந்து மூன்று மாதங்களுக்குள் பதிவு வைத்தலே சிறந்த முறையாகும். இது வீண் பிரச்சினைகள் ஏற்படுவதை தடுக்கும்.

## திருமணப் பதிவு

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்களின் படி வயது வந்த ஆணும் பெண்ணும் தங்களுடைய திருமணத்தை பதிவு செய்து கொள்ள முடியும். திருமணங்கள் தொடர்பாக பல சட்டங்கள் (இனரீதியாக) காணப்படுகின்றன.

1. பொதுத் திருமண கட்டளைச் சட்டம்

2. முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம்

3. கண்டிச் சட்டம்

மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்களின் ஏற்பாட்டின் படி அந்தந்த சட்டங்களுக் குரியவர்கள் தங்களது திருமணத்தை பதிவு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணங்களை ஏன் பதிவு செய்ய வேண்டும்

திருமணத்தை பதிவு செய்யும் போது அங்கு திருமணப் பதிவுப் பத்திரம் ஒன்று உருவாக்கப் படுகின்றது. இந்தப் பதிவுப் பத்திரமானது ஒரு சட்டரீதியான ஆவணமாகும். இந்த சட்டரீதியான ஆவணங்கள் நாளாந்த வாழ்வில் நாம் எதிர் கொள்ள நேரிடும் பிரச்சினைக்கு பதில் கொடுக்கக் கூடிய ஆவணமாக அமைகின்றன. அதனால்தான் சட்டம் திருமணத்தை பதிவு செய்யுங்கள் என்று கூறுகின்றது. இங்கு திருமணத்தை பதிவு செய்வதனால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் பாதுகாக்கப் படுவதை அறிய முடியும்.

## திருமணங்களை பதிவு செய்வதால் ஏற்படும் சட்ட பாதுகாப்புக்கள்

1. திருமணம் செய்தவர்களிடையே திருமணம் சம்பந்தமாகவும் வேறுபிரச்சினைகளும் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் தங்களுக்கிடையே இடம் பெற்ற திருமணம் செல்லுபடியான, சட்ட ரீதியான திருமணம் என்பதை நிருபிக்க.

2. திருமணம் செய்தவர்களிடையே பிறந்த குழந்தை சட்டரீதியான, நெறிமுறையான பிள்ளை என்பதை நிருபிக்க திருமணப் பதிவு உதவும்.

3. கணவன், மனைவி தொடர்பை நிருபிக்க திருமணப்பதிவு உதவும்.

4. பிறந்த குழந்தையின் பிறப்புப் பதிவுப் பத்திரத்தில் தந்தையின் விபரத்தை குறிப்பிடுவதற்காக.

5. ஊழியர் சேமலாப நிதி பெறும் போது திருமணப்பதிவு அவசியமாகின்றது.

6. ஓய்வூதியம் பெறும் சந்தர்ப்பத்தில் திருமணப்பதிவு அவசியமாகின்றது.

7. சொத்துரிமை சம்பந்தமாக பிரச்சினைகள் வரும் போது திருமணப் பதிவு அவசியமாகின்றது.

8. மரணக் கொடுப்பனவுகள் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் திருமணப்பதிவு தேவைப்படுகின்றது.

9. பலதார மணம் புரிந்தால் அத்தகையவருக்கு எதிராக அதனை நிருபிக்க திருமணப்பதிவு அவசியமாகின்றது.

மேலே குறிப்பிட்ட விடயங்களில் இருந்து ஏன் திருமணத்தை பதிவு செய்தல் வேண்டும் என்பது மிகவும் தெளிவாக விளங்கும். திருமணத்தை பதிவு செய்தால் மாத்திரம்போதாது அந்த திருமணப் பதிவுப் பத்திரத்தை தங்களிடம் பாதுகாப்பாக வைத்திருத்தலும் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பை பதிவு செய்தல்

இறப்பு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படக்கூடிய ஒன்று. இதன் அர்த்தம் என்னவெனில், எல்லோரும் இறக்கக் கூடியவர்கள். இவ்வாறாக இறப்பு ஒன்று ஏற்பட்டுவிட்டால் அந்த இறப்பை பதிவு செய்தல் அவசியமாகும். இதனை பிறப்பு, இறப்புச் சட்டம் ஏற்பாடு செய்கின்றது.

வீட்டில் மரணம் ஒன்று ஏற்பட்டுவிட்டால் அதனை பகுதி கிராம சேவையாளருக்கு தகவல் கொடுத்து இறப்பு நடந்து ஐந்து நாட்களுக்குள் இறப்பை பதிவு செய்தல் வேண்டும்.

வைதியசாலையில் மரணம் ஏற்படின் இது இரண்டு வகையாக கவனிக்கப்படும். அதாவது, நோயாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் இறந்தால் பொலிஸார் ஊடாக பகுதி நீதவான் அல்லது மரண விசாரணை அதிகாரி விசாரணைகளின் பின் மரணப் பதிவு வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

அவ்வாறு இல்லாமல் வைத்தியசாலையில் நோயாளி அனுமதிக்கப்பட்டு 24 மணித்தியாலத்திற்கு பின்பு மரணம் ஏற்படின் அங்கு பொலிஸாருக்கு அறிவிக்க தேவையில்லை. இந்த மரணம் சாதாரண மரணமாகக் கருதப்பட்டு பகுதி கிராம சேவையாளறூடாக பகுதியில் கடமையாற்றும் பிறப்பு, இறப்பு பதிவாளறூடாக மரணத்தை பதிவு செய்ய முடியும்.

அத்துடன் தோட்டங்களில் ஏற்படும் மரணங்களை தோட்ட அத்தியட்சகர் ஊடாக பதிவாளர் பதிவு வைக்க முடியும்.

## இறப்பை ஏன் பதிவு செய்ய வேண்டும்

1. நபர் ஒருவர் இறந்து விட்டார் என்பதை நிருபிக்க.
2. சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் நீதிமன்றில் இருக்கும் சந்தர்ப்பங்களில் இறப்பை ஒப்புவிக்க.
3. இறந்தவர் ஆயுள் காப்புறுதி செய்திருந்தால் காப்புறுதி தொகையினை அவரின் வாரிசுகள் பெற்றுக் கொள்ள.
4. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியத்தை இறந்தவரின் வாரிசுகள் பெறும் சந்தர்ப்பத்தில் இறப்பை பதிவு செய்திருத்தல் அவசியமாகின்றது.
5. இறந்த திகதி, இடம், இறக்கும் போது வயது, மரணத்திற்கான காரணம் என்பவைகளை தேவை ஏற்படும் இடங்களில் எடுத்துக் காட்டுவதற்காக இறப்பை பதிவு செய்தல் வேண்டும்.
6. இறப்பு உரிமைத் தொகை, நட்ட ஈட்டுத் தொகை என்பவைகளை பெற்றுக் கொள்ளவும் இறப்பை பதிவு செய்தல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரும் பொது மக்களும்

நாட்டிற்கு தேவையான சட்டங்களை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்தி நாட்டினையும் அதன் மக்களையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு நாட்டினையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்காக சட்டத்தினை ஏற்படுத்தி வைத்தாலும் அதனை நடைமுறைப்படுத்தவும், சட்டத்தினை பாதுகாக்கவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே பொலிஸ் ஆகும். பொலிஸார் என்பவர்கள் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டவர்கள். பொலிஸார் பற்றி சுருங்கக்கூறின், சட்டத்தின் பாதுகாவலர்கள் ஆவார்கள். சட்டத்தினை பாதுகாப்பதன் மூலம் நாட்டினையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பவர்கள் என்ற பொருளில் அடங்குவார்கள்.

பொலிஸார் என்பவர்கள் நாட்டு மக்களை பாதுகாப்பவர்கள், நாட்டு மக்களுக்கு கேடு செய்பவர்கள் அல்ல. சமுதாயத்தில் யாராவது குற்றச் செயலில் ஈடுபட்டால் அவர்களை கைது செய்து நீதி மன்றின் மூலம் தண்டனை பெற்றுக் கொடுப்பவர்கள். குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் நீதி மன்றில் குற்றவாளியாக காணப்பட்டால் தண்டனை வழங்கப்படுகின்றன். இதற்கான காரணம் குற்றம் அற்ற மனித சமுதாயத்தை கட்டியெழுப்புவதன் மூலம் நல்ல நாட்டு பிரஜைகளை உருவாக்குவதே ஆகும்.

பொலிஸாரை நினைத்து பொதுமக்கள் பயந்து நடுங்க வேண்டிய அவசியம் இல்லை. பொது மக்களை பாதுகாக்கவே பொலிஸ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது என்பதை எல்லோரும் அறிய வேண்டும். பொது மக்களுள் பொலிஸாரும் அடங்குவார்கள். சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பது எல்லோருக்கும் பொதுவான ஏற்பாடாகும். வேறுபாடு, பக்கச்சார்பு இல்லாமல் பொலிஸார் தங்களுடைய கடமைகளை செவ்வனே நிறைவேற்ற வேண்டும். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

குற்றச் செயல்களில் ஈடுபடாமல் பொதுமக்கள் சட்டத்தினை மதித்து நடந்தால் அமைதியான வாழ்க்கை ஏற்பட சந்தர்ப்பம் உண்டு. குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைப் பற்றி பொதுமக்கள் பொலிஸாருக்கு தயக்கம் காட்டாது எடுத்துக் கூற வேண்டும். அப்போதுதான் குற்றச் செயல்களைத் தடுக்க பொலிஸாரால் முடியும். பொலிஸார் பொதுமக்களின் எதிரிகள் அல்ல. அதே போன்று பொதுமக்கள் பொலிஸாரின் எதிரிகளும் அல்ல. ஆனால் பொலிஸார் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் எதிரிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள்

மேலே குறிப்பிட்டுள்ள தலைப்பு மிகவும் மனவேதனைக்குரிய தலைப்பாகும். துரதிஷ்ட வசமாக தங்களுடைய சொந்த மண்ணில் வாழமுடியாமல் ஊர், வீடு, இருப்பிடத்தை விட்டு வேறு இடத்திற்கு இடம் பெயர்ந்து மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களைத் தான் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்தவர்கள் என வரையறுக்கப்படுகின்றார்கள்.

இவ்வாறு இவர்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்து வாழ்வதற்கு பல வகையான விடயங்கள் காரணமாக அமையலாம். உதாரணமாக யுத்தம், ஆயுதக்குழுக்களின் கோரிக்கை, இராணுவத்தினரின் கட்டளை, குறிப்பிட்ட சில இடங்களில் அந்த மக்களின் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், இயற்கை அனர்த்தங்கள்.

இவ்வாறாக இடம் பெயர்ந்த மக்களை கையாள்வது தொடர்பில் சில விதிகளும், கொள்கைகளும் வகுக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைகளும், கோட்பாடுகளும் சர்வதேச மனித உரிமைச் சட்டம் அத்துடன் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் என்பவைகளில் இருந்து கையாளப்படுகின்றன. இதன் அடிப்படையிலேயே உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகள், உரிமைகள், சுதந்திரங்கள், பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் சார்பாக ஏற்படுத்தப் பட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் என்பனவைகள் உள்நாட்டுச் சட்டங்களினால் வேறு விதமாக இடம் பெயர்ந்தவர்களுக்கு எதிரான முறையில் பொருள்கோடல் செய்ய முடியாது என்பது முக்கியமானதாகும்.

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் சார்பாக கோரிக்கைகளையும், வேண்டுதல்களையும் முன்வைக்க உரித்துடையவர்களை இவ்வாறு, இவர்கள் கோரிக்கைகளையும், வேண்டுதல்களையும் முன்வைக்கும் போது அதற்காக அவர்களை குற்றம் சாட்ட முடியாது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் யாராக இருந்தாலும் இன, மத, நிற, பிரதேச, மொழி வேறுபாடு இன்றி எல்லோரையும் சமமாக கவனிக்க வேண்டும். சாதாரண மக்களுக்குரிய உரிமைகள் போன்று இடம் பெயர்ந்த மக்களுக்கும் உரிமைகள் உண்டு. என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயலாதவர்கள் (ஊனமுற்றவர்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள்)

இயலாதவர்கள் என்பவர்கள் (ஊனமுற்றவர்) இரண்டு வகையில் அடங்குவார்கள்.

1. பிறப்பின் மூலம் இயலாதவராக பிறத்தல். அதாவது, அங்க குறைபாடுடன் பிறத்தல்.

2. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் சீராக இருந்த ஒருவர் இயலாத நிலைக்கு தள்ளப்படுதல். அதாவது, விபத்து காரணமாக உடல் அங்கங்களை இழந்து ஊனமுற்றவராக மாறுதல் அல்லது யுத்த நடவடிக்கையின் போது உடல் அங்கங்கள் இழக்கப்பட்டு உடல் ஊனமுறுதல். மேலே விபரிக்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களும் ஒரு மனிதனுக்கு துர்ப்பாக்கியமான நிலையை ஏற்படுத்துகின்றன. இப்படியானவர்கள் சிறுவர்களாக, ஆண்களாக, பெண்களாக, வயோதிபர்களாக ஏன் வாலிபர்களாகவும் இருக்கக்கூடும்.

இப்படியாக ஊனமுற்றவர்களுக்கு சட்டம் என்ன பாதுகாப்பை வழங்குகின்றது. எமது அரசியலமைப்பின் 3ம் அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய கோட்பாடுகளில் முக்கியமாக சட்டத்தின் முன் சகலரும் சமம் என்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு எல்லோருக்கும் உண்டு எனவும் எடுத்துக் காட்டுகின்றது. இதன் அடிப்படையில் நோக்கும் போது ஊனமுற்ற இயலாத மக்களுக்கும் மற்றைய ஏனைய மக்களைப் போன்று எல்லா உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பது அதன் உண்மையாகும்.

இயலாத ஊனமுற்ற பகுதியினர் சார்பாக அரசாங்கம் காலத்திற்கு காலம் அவர்களுடைய நலன்கருதி பல சட்டங்களை நிறைவேற்றி நடைமுறைப்படுத்துகின்றது. இந்த அடிப்படையில் 1996ம் ஆண்டு ஊனமுற்ற மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கென கொண்டுவரப்பட்ட 28ம் இலக்கச் சட்டம் இவர்கள் தொடர்பில் முக்கிய ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. அதாவது, இந்த சட்டத்தின் படி ஊனமுற்றவர்களுக்கான தேசிய சபை ஒன்றை ஏற்படுத்தி அதனூடாக அவர்களுக்கு கடமை செய்வது அத்துடன் இந்த சட்டத்தில் முக்கியமாக குறிப்பிடப்பட்ட உரிமை என்னவெனில், ஊனமுற்றவர்களுக்கு கல்வி கற்பதிலும், தொழில்வாய்ப்புப் பெறுவதிலும் பாகுபாடு காட்டக்கூடாது என்றும் அவர்களுக்கான ஒரு சூழலை கட்டியெழுப்புவதற்கு பாகுபாடு காட்டக்கூடாது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஊனமுற்றவர்கள் தொடர்பாக 1992ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 9ம் இலக்க ஊனமுற்றவர்களுக்கான நம்பிக்கை நிதியச் சட்டம் இன்னும் விரிவான வாய்ப்புக்களை வழங்குகின்றது. இதன்படி ஊனமுற்றவர்களுக்கான கல்வி, தொழில் பயிற்சி வசதிகளை வழங்கி அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வறுமையை குறைப்பதோடு சுயதொழிலுக்கான நிதி உதவிகளையும் வழங்குவதாகும். மேலும், ஊனமுற்றவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்களையும் அரசசார்பற்ற நிறுவனங்களுடாக நடைமுறைப்படுத்துதல்.

1996ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 17ம் இலக்க சமூக பாதுகாப்புச் சபைச் சட்டம் இவர்கள் தொடர்பில் இன்னும் விசாலமான ஏற்பாடுகளை சாதகமாக விரிவு படுத்தியுள்ளது. இந்தச் சட்டமானது ஊனமுற்றவர்கள் செய்கின்ற சுய தொழிலை மேம்படுத்துவதற்காக அதில் அவர்கள் நன்மையடைவதற்காக ஏற்பாடுகளை செய்திருக்கின்றது. அதாவது, வேலை நேரத்தின் போது விபத்து ஏற்பட்டால் நட்டஈடு பெறுவதற்கும், ஊனமுற்றவர்கள் வேலையில் இருந்து ஓய்வு பெறும்போது ஓய்வூதியச் சம்பளம் பெறுவதற்கும் இந்தச் சட்டம் ஏற்பாடுகளைச் செய்கின்றது.

மேலே கூறிய சட்டங்களின் ஏற்பாடுகளின் படி இயலாதவர்கள் அல்லது ஊனமுற்றவர்கள் என்பவர்கள் யாருக்கும் கீழ்ப்பட்டவர்கள் அல்ல என்பது தெளிவாகின்றது. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், இயலாதவர்கள் அல்லது ஊனமுற்றவர்கள் தாங்களும் சட்டத்தின் முன் சமமாக கணிக்கப்படுகின்றோம் என்பதாகும். ஊனமுற்றவர்கள் தங்களைத் தாங்களே கீழ்ப்படுத்திக் கொள்ளக்கூடாது. சட்டம் யார் மீதும் பாகுபாடு காட்டுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட உதவியை எவ்வாறு பெறுவது

நமது சமுதாயத்தில் பல் வகைப்பட்ட மக்களுக்கு பல வகையான சட்டப் பிரச்சினைகள் இருக்கலாம். அத்தகைய பிரச்சினைகளை தனிப்பட்டமுறையில் சட்டத்தரணிகளை நியமித்து ஆலோசனை பெற்று வழக்காடுபவர்கள் இருக்கின்றார்கள். இவ்வாறு சட்டத்தரணிகளை தனிப்பட்டமுறையில் நியமித்து ஆலோசனை பெறுவதற்கோ அல்லது அவர்கள் சார்பாக வழக்காடுவதற்கோ பணவசதியற்ற மக்களும் இருக்கின்றார்கள். இவ்வாறான மக்கள் தங்களிடம் பண வசதி இல்லை என்பதற்காக தங்களுக்கு கிடைக்கக்கூடிய உரிமைகளை இழந்து நிற்கின்றார்கள். இது ஒரு துர்ப்பாக்கியமான நிலையாகும்.

பணவசதியற்ற மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு இலவசமாக சட்ட ஆலோசனை பெறுவதற்கும், இலவசமாக நீதிமன்றில் வழக்காடி தங்கள் உரிமைகளை நிலைநாட்டவும். சில நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அவைகளாவன.

1. UNDP ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழான சட்ட உதவி கருமபீடம்.

2. UNHCR ம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் இணைந்து செயற்படுத்தும் சட்ட உதவி மன்றம்.

3. குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டோருக்கான தேசிய நிலையம். இது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. இதன் காரியாலயம் கொழும்பில் உயர் நீதி மன்றக் கட்டிடத் தொகுதியில் உள்ளது.

மேலே முதலாவதாகவும், இரண்டாவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட உதவி நிலையங்களில் சேவைகளைப் பெறுவதாயின் அவ்வாறு உதவிகளைப் பெறுபவர்கள் பணவசதி குறைந்தவர்களாக இருக்க வேண்டும். அதாவது. மாத வருமானம் 6000/= வுக்கு குறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இப்படியாக சேவையை நாடுபவர்கள் பின்வரும் இடங்களில் தங்களுக்குத் தேவையான சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்**

1. கல்முனை நீதிமன்றக் கட்டிடத் தொகுதியில் இயங்கும் சட்ட உதவி மன்றம் மற்றும் சட்ட உதவி கருமபீடம். (எம்.எஸ். காரியப்பர் சட்டத்தரணி, மற்றும் வஹாப்தீன் சட்டத்தரணி).

2. புத்தளம் :- திரு. அப்துல் மஜீத் கமறுதீன் - சட்டத்தரணி
10, மன்னார் வீதி,
புத்தளம்,
தொலை பேசி 632-65207

3. மன்னார் :- திரு. ஜபறுல்லா - சட்டத்தரணி
நீதி மன்றக் கட்டிடம்,
மன்னார்,
தொலை பேசி 032-68639

4. திருகோணமலை :- திரு. மு. சிவபாலன் - சட்டத்தரணி
நீதி மன்ற வளாகம்,
திருகோணமலை.
தொலை பேசி 02 6-229993

5. யாழ்ப்பாணம் :- திருமதி சாந்தா அபிமான சிங்கம் - சட்டத்தரணி
உடுவில்,
யாழ்பாணம்.
தொலை பேசி 075-212671

6. பருத்தித்துறை :- திரு வி. குமாரசாமி – சட்டத்தரணி
நவிண்டில்,
கரவெட்டி.
தொலை பேசி 032-68639



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அனுராதபுரம் :- திரு. அசோக மகாதிவுலுவே - சட்டத்தரணி
நீதி மன்ற வளாகம்,
அனுராதபுரம்.
தொலை பேசி 025-22356

8. பொலநறுவை :- திரு. மு. னு. விமலதாச - சட்டத்தரணி
புதிய நகரம்,
பொலநறுவை.
தொலை பேசி 027-22469

9. வவுனியா :- திரு சிற்றம்பலம் - சட்டத்தரணி
நீதி மன்ற வளாகம்,
வவுனியா.
தொலை பேசி 024-22662

10. மட்டக்களப்பு :- திரு. நாராயணப்பிள்ளை - சட்டத்தரணி
திரு. நு. கந்தசாமி - சட்டத்தரணி
300 பார் வீதி,
மட்டக்களப்பு.
தொலை பேசி 065- 23567



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Print: Riha Offset Akkkaraipattu - Speed Graphic Land Akp.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org